

பாடம் 10

ஜூன் 1-7

# அம்பலமான ஆவிமார்க்கம்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** மத் 10:28; பிர 9:5; ஏசா 8:19,20; யோவான் 11:11–14, 21–25; வெளி 16:13,14; மத் 24:23–27; 2 தெச 2:9–12.

**மனன வசனம்:** கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும்வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். 1தெச 4:16,17.

பல வருடங்களுக்குமுன்பு, ‘கிட்டத்தட்ட மரித்த அனுபவம்’ என்கிற அனுபவம்பற்றி பரபரப்பாகப் பேசப்பட்டது. மரித்தவர்கள், மீண்டும் உயிரோடு வந்து, தாங்கள் ‘மரித்திருந்த’ சமயத்தில் அனுபவித்த நம்பமுடியாத கதைகளைச் சொன்னார்கள். மரிக்கிறவர்கள் உண்மையில் சாவதில்லை என்பதற்கு இந்தக் கதைகள் ஆதாரமாக இருப்பதாக பலர் இப்போது நம்புகிறார்கள். ஆவிமார்க்கத்தின் இந்த அடிப்படை நம்பிக்கைதான், சாத்தானின் மிகவும் பரவலான, ஆற்றல்மிக்க வஞ்சகங்களில் ஒன்றாக இருக்கிறது.

முதன்முதலில் ஏதேனில்தான் ஆவிமார்க்கம் தொடங்கியது; அங்குதான் ஆதாம், ஏவாளிடம் சர்ப்பமானது, ‘நீங்கள் சாகவே சாவதில்லை’ என்றது. ஆதி 3:4. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய பொய்மார்க்க இயக்கங்கள் ஆரம்பிப்பதற்கு இந்தக் கருத்து அடிப்படையாக இருந்தது; அச்சமயத்தில் ஃபாக்ஸ் சகோதரிகள், மரித்தவர்களின் ஆவிகளோடு பேசி, தங்களால் பதில் பெறமுடியும் என்று சொல்லிவந்தார்கள்; அவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்பது பின்னர் நிரூபணமானது.

சாத்தானின் கடைசிக்கால வஞ்சகங்களுக்கு எதிராக நமக்குள்ள ஒரே பாதுகாப்பு கிறிஸ்துவோடுள்ள தனிப்பட்ட உறவு, வேதாகமப் போதனைகளில் உறுதியான அடித்தளம். மரித்தோரின் நிலை குறித்த வேதாகமப்போதனையும் அடங்கும்; இந்த விஷயத்தில் நம் மனது, காது, கண் சொல்வதை நம்பக்கூடாது.

***மாபெரும் போராட்டம், 31-34ம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, 8 ஜூன் வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# ஆவிமார்க்கத்தின் கொடிய விளைவுகள்

மரணம் என்பது வாழ்க்கையின் ஒரு புதிய நிலைக்குள் செல்வது என்கிற கட்டுக்கதை; அது 'ஆத்துமா அழியாதது' என்கிற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த அஞ்ஞானக் கருத்து ஆரம்பத்திலேயே சபைக்குள்ளாக நுழைந்தது; ரோம உலகின் மக்கள் விசுவாசத்தை எளிதில் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்லி, வேதாகம அடித்தளங்களை மறந்து, இக்கருத்து பரப்பப்பட்டது. 'ஆத்துமா அழிவில்லாதது என்பது ரோம மார்க்கம் அஞ்ஞான மார்க்கத்திடமிருந்து இரவல் பெற்று, கிறிஸ்தவ மார்க்கத்திற்குள் கலந்துவிட்ட தவறான கோட்பாடுகளில் ஒன்றாகும்.'

**'ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தைமாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்'. மத் 10:28. ஆத்துமா அழிவில்லாதது என்கிற கற்பித கருத்துபற்றி இந்த வசனம் என்ன சொல்லுகிறது?**

---

தம் மக்கள் பிசாசின் எவ்விதமான காரியங்களிலும் ஈடுபடக் கூடாதென்று கர்த்தர் தடை செய்திருந்தார். 'செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்' என்று சொன்னார். உபா 18:11. அவ்வாறு செய்பவர்களை கல்லெறிந்து கொல்லக் கட்டளையிட்டார். லேவி 20:27. இது மிகக்கடுமையான தண்டனைபோலத் தெரியலாம்; ஆனால், பொய்த்தெய்வங்களைத் தொழுவதிலிருந்து இஸ்ரவேலரைப் பாதுகாக்க இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

பில்லிசூனியம் பிசாசுக்குரியது. அது மக்களை பொய்தொழுகைக்குள் இழுத்து, தேவனோடு மெய்யான உறவு இருப்பதுபோல மாயமாகத் தோன்றச் செய்கிறது; இதால் இருதயத்தின் ஆழமான தேவைகளைச் சந்திக்கவே முடியாது. ஆனால், அவர்களைக் கட்டியிருக்கிற தீமையின் கட்டுகளை இயேசு தம் கிருபையாலும் வல்லமையாலும் அறுத்து, அவர்களை விடுவிக்கிறார்.

**மரணம்பற்றியும், மரித்தவர்களோடு பேசுவதுபற்றியும் பிர 9:5; யோபு 7:7-9; ஏசா 8:19,20 சொல்வது என்ன?**

---

மரிப்பவர்கள் உடனடியாக பரலோகத்திற்குச் செல்கிறார்கள் என்கிற நம்பிக்கை வேதாகமத்திற்கு புறம்பானது; ஞாயிறு ஆசரிப்பு போல இந்தக் கருத்தும் பல காலமாக நிலவி வருகிறது; இது வேரூன்றிவிட்டதால், இதிலிருந்து வெளியேறுவது மக்களுக்கு கடினமாகிவிட்டது. இந்த நம்பிக்கையை நியாயப்படுத்த சில வசனங்களை தவறாக அர்த்தங்காண்கிறார்கள். ஆனால் இந்தப் பொய்ப்போதனை சாத்தானின் வஞ்சகங்களுக்கு எதிராக, குறிப்பாக இறுதி நெருக்கடியில் அவர்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்கமுடியாது.

---

**மரித்தோரின் நிலைகுறித்து பிற கிறிஸ்தவர்களிடம் விளக்கியிருக்கிறீர்களா? எத்தகைய விளக்கம் பயனுள்ளதாக இருந்தது?**

# பழைய ஏற்பாட்டில் மரணம்பற்றி

**மரித்தோரின் நிலைபற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்லுகின்றன? சங் 6:5; சங் 115:17; 1இராஜா 2:10; 11:43; 14:20.**

---

ஆத்துமா அழிவில்லாதது என்று பழைய ஏற்பாடு போதிக்கவே இல்லை. மரணத்திற்குப்பிறகு உண்மையுள்ளவர்கள் பரலோக பேரானந்தத்திற்குள் நித்தியமாகப் பிரவேசிக்கிறார்கள் என்றோ, உண்மையற்றவர்கள் நரகத்திற்குச் சென்று நித்தியகாலமாக எரிகிறார்கள் என்றோ போதிக்கவுமில்லை. மரணம் ஒரு நித்திரை என்று போதிக்கிறது. இராஜாக்களின் புத்தகம், கோத்திரப்பிதாக்களின் மரணம்பற்றி தங்கள் 'பிதாக்களோடே நித்திரையடைந்து' என்று குறிப்பிடுகிறது. மரணத்தை சங்கீதங்கள் 'மரணநித்திரை' என்று குறிப்பிடுகின்றன. சங் 13:3; சங் 90:5. யோபு மரணத்தைப்பற்றிப் பேசும்போது, எழுந்திருக்காமல் படுத்துக்கிடப்பது என்கிறார். யோபு 14:12. சங்கீதக்காரன், 'நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்' என்கிறார். சங் 17:15.

அசீரியப்படை தோற்கடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டபோது, வீர்ர்கள் மடிந்ததுபற்றி, 'உறங்கி விழுந்(தார்கள்)' என்று சங் 76:6 சொல்கிறது. மரிக்கும்போது சரீரத்தைவிட்டு ஆவி பிரிந்து, அங்குமிங்கும் அலைந்து, உயிரோடிருக்கிறவர்களிடம் பேசுகிறது என்பது வேதாகமப் போதனை அல்ல; அது, முற்றிலும் அஞ்ஞானக் கருத்தாகும்.

மரணம்பற்றிய உண்மையைப் புரிந்துகொள்ளத் தவறுவது சாத்தானின் வஞ்சகங்களுக்கு ஆளாகச் செய்கிறது. தங்களுக்குப் பிரியமான உறவினர்கள் அல்லது நண்பர்கள்போல தோன்றி, மிகப்பயங்கரமான மதப்புரட்டுகளை அறிவிக்கிற பிசாசின் ஆவிகளை இன்று அநேகர் எதிர்கொள்ள நேரிடும். இவ்வாறு வருபவர்கள், நமது அனுதாபங்களை வென்று, தங்கள் பாசாங்குகளைத் தக்கவைக்க அற்புதங்களைச் செய்வார்கள். மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் என்றும், அவ்வாறு தோன்றுபவர்கள் பிசாசுகளின் ஆவிகள் என்றும் சொல்லுகிற வேதாகமச் சத்தியத்தால் அவர்களை எதிர்கொள்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

**மரித்தோரின் நிலைகுறித்த வேறு என்ன கருத்துகளை தானி 12:2; யோபு 19:25, 26 சொல்கின்றன?**

மரணம் என்பது உயிர்த்தெழுதல்வரை இளைப்பாறுகிற தூக்கமாகும். அப்படித்தான் இஸ்ரவேலர் நம்பினார்கள். சரீரத்தைவிட்டு ஆவிகள் பிரிந்து, உயிரோடிருக்கிறவர்களோடு பேசுவதில்லை. அஞ்ஞானிகள்தாம் ஆவியுலகத்தை நம்புகிறார்கள்.

மரித்தவர்களுக்காக நாம் துக்கிக்கலாம்; ஆனால் கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் மரணத்தின்போது கண்களை மூடுகிறார்கள்; ஆனால் இயேசு வருவதற்கு எவ்வளவு காலம் ஆனாலும்கூட அவர்கள் அடுத்து உணருவது இயேசுவின் இரண்டாம் வருகையாகத்தான் இருக்கும். உயித்தெழுதலை ஆச்சரியத்தோடு தான் பார்க்கப்போகிறார்கள்! இயேசு இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டாரா என்று நினைப்பார்கள்!

# புதிய ஏற்பாட்டில் மரணம்பற்றி

**புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் மரணம்பற்றி எவ்வாறு விவரிக்கிறார்கள்? யோவான் 11:11-14, 21-25; 2தீமோ 1:10; 1கொரி 15:51-54; 1தெச 4:15-17.**

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் மரணத்தை நித்திரை என்று அழைக்கின்றன. வேதாகமத்தில் கிட்டத்தட்ட ஐம்பத்து மூன்று இடங்களில் மரணம் 'நித்திரையுடன்' ஒப்பிடப்படுகிறது. மரித்ததும் சரீரத்திலிருந்து பிரிகிற ஆத்துமாவுக்கு சுய நினைவு இருப்பதில்லை என்பதை வேதாகம எழுத்தாளர்கள் புரிந்திருந்தார்கள்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், ஏற்கனவே மறைமுகமாக பழைய ஏற்பாடு சொல்கிற ஒன்றையும் சேர்க்கிறார்கள்; அது கிறிஸ்து வரும்போது நிகழ்கிற உயிர்த்தெழுதல்.

கிறிஸ்துவில் மட்டுமே நித்திய ஜீவன் உண்டென சுவிசேஷம் வலியுறுத்துகிறது. நரகத்தில் உள்ள பிசாசுகள் அனைத்தும் சேர்ந்தாலும்கூட, நித்திய வாழ்வு குறித்த நிச்சயத்தை விசுவாசிகளிடமிருந்து எடுக்கமுடியாது. கல்லறையால் அதற்குள் இருப்பவர்களை அடைத்துவைக்க முடியாது. அவரது வருகையில், விசுவாசிகள் அனைவரும் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுவார்கள் என்கிற நிச்சயத்தை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கொடுக்கிறது.

'மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே' என்று பவுல் சொல்கிறார். 1கொரி 15:16-18. மரித்தவர்கள், தாங்கள் மரித்ததும் பரலோக பேரின்பத்திற்குள் செல்கிறார்கள் என்றால், இந்த வசனம் சொல்வதில் ஏதாவது அர்த்தம் இருக்கமுடியுமா? அவர்கள் ஏற்கனவே பரலோகத்தில் இருந்தால் அவர்கள் 'கெட்டிருப்பார்களே' என்று பவுல் சொல்லியிருக்க முடியுமா?

மாறாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம் உயிர்த்தெழுதலுக்கு அடிப்படையாக இருக்கிறது; அந்த உயிர்த்தெழுதல் இல்லாமல், 'உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்'. மரித்தவர்கள் கல்லறையிலேயே இருந்து, மடிந்துபோயிருப்பார்கள்.

இயேசு வரும்போது நடக்கிற உயிர்தெழுதலால் நாம் பெற்றுள்ள நம்பிக்கை பற்றிப் பேசுகிற பிற வேதாகம வசனங்களுடன் இந்த வசனங்கள் ஒத்துப்போகின்றன; அதாவது, 'அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிற' சுதந்தரத்தைப் பெறப்போகிறோம். 1பேதுரு 1:4. மரித்தவர்கள் ஏற்கனவே பரலோகத்தில் இருப்பார்களானால், அந்தச் சுதந்தரம் 'பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது' என்று பேதுரு ஏன் சொல்லவேண்டும்? புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கிறிஸ்துவின் வருகைக்காகவும் மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்காகவும் எதிர்பார்த்திருந்தார்கள்; வாழ்க்கையின் சோதனைகளில் உண்மையோடு இருப்பதற்கு இந்த நம்பிக்கை ஊக்குவித்தது.

---

**உயிர்த்தெழுதல் ஏன் கிறிஸ்தவ விசுவாசத்தின் நம்பிக்கையாக இருக்கிறது? கிறிஸ்து சிலுவையில் மரித்திருந்தும், உயிர்த்தெழுதல் இல்லையென்றால், ஏதாவது நம்பிக்கை இருக்குமா? அப்படியானால், உயிர்த்தெழுதல் ஏன் நம் விசுவாசத்தில் முக்கியமானதாக இருக்கிறது?**

# கடைசி நாட்களில் ஆவிக்குரிய மார்க்கம்: பகுதி 1

**கடைசி நாட்களில் மக்கள் எத்தகைய வஞ்சகங்களைச் சந்திக்க நேரிடும்? மத் 24:5,11,24; 2தெச 2:7-9; வெளி 13:13,14; வெளி 16:13,14.**

இயேசுவின் வருகைக்குச் சற்றுமுன் பெருந்திரளான மக்களை வஞ்சிப்பதற்காக பிசாசு பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வான். பிசாசுகளின் வஞ்சக வல்லமை குறித்து ஆஞ்சல் ராட்ரிகஸ் இவ்வாறு விளக்குகிறார்: 'அவர்களுடைய செய்திகளுக்கு அல்ல, ''அற்புதங்கள்'' மற்றும் ''அடையாளங்கள்'' என்று அழைக்கப்படுகிற அவர்களுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல்களுக்குத்தான் கவர்ந்திழுக்கிற சக்தி இருக்கும். அடையாளங்களைச் செய்கிறார்கள்; அதன்மூலம் மனிதர்களின் விருப்புரிமை அல்லது பகுத்தறிவு திறன்களை அல்ல, அவர்கள் எளிதில் வசமாகக்கூடிய அம்சத்தைத் தாக்குகிறார்கள். இந்த அடையாளங்களை பிசாசுகள் செய்கின்றன என்பது உண்மை. மூன்று பிசாசுகளுடைய (வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி) செய்தியும் சேர்ந்து உருவாகிற ஆற்றல் ஆவிக்குரிய தன்மையுடன் இருப்பதையும், ஆனால் அது தேவனிடமிருந்து உண்டாகவில்லை என்பதையும் இந்த உண்மை காட்டுகிறது. மாபெரும் போராட்டம் முடிவை நெருங்குகிற நிலையில், பிசாசின் வல்லமை எதிர்பாராத வகையில் மனித வரலாற்றில் செயல்படத் துவங்கும். ஆத்துமா அழிவில்லாதது என்கிற வேதாகமத்திற்குப் புறம்பான போதனையை அடித்தளமாகக்கொண்ட ஆவிக்குரியமார்க்கம், உலகத்தைகிட்டத்தட்டசிறையாக்கிவிடும்'.[1]

**நம் உணர்வுகளை நம்புவது ஏன் ஆபத்தானது? நம் விசுவாச அனுபவத்தில் அவற்றின் நன்மையான, தீமையான பங்குகள் என்ன? சாத்தான் எவ்வாறு நம் சிந்தனைச் செயல்முறைகளை முடக்கி, நம் உணர்வுகளை தனக்குச் சாதகமாக்கக்கூடும்?**

'உலகத்தை வஞ்சிக்கிற இறுதி முயற்சிக்கு சாத்தான் நீண்டகாலமாக ஆயத்தம்செய்து வருகிறான். ஆவிமார்க்கம் வளருவதற்கு தனது வஞ்சகம் உதவிசெய்வதற்காக கொஞ்சம்கொஞ்சமாக வழியை ஆயத்தம்செய்தான். தனது திட்டங்களை முற்றிலும் நிறைவேற்றுகிற கட்டத்தை அவன் இன்னும் எட்டவில்லை; ஆனால் கடைசி நேரத்தில், அந்தக் கட்டம் வந்துவிடும்.... தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைப்பதன்மூலம், தேவ வல்லமையால் பாதுகாக்கப்படுகிறவர்கள்தவிர, உலகம் முழுவதும் இந்த மருட்சியின் நிலைகளுக்குள் இழுக்கப்படும். தேவனுடைய கோபம் ஊற்றப்பட்டால் மட்டுமே விழித்துக்கொள்ளும்படி, மக்கள் அபாயகரமான பாதுகாப்பு உணர்விற்குள் வேகமாக இழுக்கப்பட்டு வருகிறார்கள்'. நம் ஒரே பாதுகாப்பு இயேசுவிலும் அவரது வார்த்தையிலும்மட்டுமே உள்ளது.

மரித்தோரின் நிலைபற்றி அறியாத கோடிக்கணக்கான மக்கள், 'மரித்தவர்கள் மரணத்திற்கு பிறகும் வாழ்கிறார்கள்' என்கிற வஞ்சகங்கத்துக்குள் இழுக்கப்படுகிறார்கள்.

[1] The Closing of the Cosmic Conflict: Role of the Three Angels' Messages," unpublished manuscript, p. 6.

**மரித்தவர்கள் நித்திரைசெய்கிறார்கள் என்கிற உண்மையைப் புரிந்தவர்கள் இன்றுகூட எத்தகைய வஞ்சகங்களிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்?**

# கடைசிநாட்களில் ஆவிக்குரிய மார்க்கம்: பகுதி 2

நம் இரட்சிப்பின் நம்பிக்கைக்கு அடித்தளம் கிறிஸ்துவே. ஒப்பில்லா விலைகொடுத்து இடப்பட்ட பலியை நாம் ஏற்றுக்கொள்ளும்படி அவரது இரத்தக் கரங்கள் நம்மிடம் வேண்டுகின்றன. தமக்குச் சொந்தமானவர்களைக் கூட்டிச்சேர்க்க சீக்கிரத்தில் வருவார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை 'ஆனந்த பாக்கியம்' என்று தீத்து 2:13 அழைக்கிறது.

இந்த நம்பிக்கையை அழிப்பதுதான் சாத்தானுடைய நோக்கம். அவன் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வான்; வேதாகமச் சத்தியத்திலிருந்தும் கிறிஸ்துவில் கிடைக்கிற இரட்சிப்பிலிருந்தும் மக்களை வழிவிலக்குவதற்கு எதையும், செய்வான்.

'தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்'. வெளி 14:12. இறுதிப் போராட்டத்தில், மக்கள் 'தேவனுடைய கற்பனைகளைக்' கைக்கொள்ளாமலும், 'இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை' காத்துக்கொள்ளாமலும் ஆக்கும்படிக்கு சாத்தான் அனைத்தையும் செய்யப்போகிறான். எனவே, மீதமானவர்களின் இந்த இரண்டு குணநலன்களில் எதிலிருந்தாவது நம்மை விலக்கக்கூடிய எந்தப் போதனைக்கும், அது அற்புதங்களாலும் அடையாளங்களாலும் செய்யப்பட்டாலும் அதற்குச் செவிகொடுக்காதபடி கவனமாக இருக்கவேண்டும்.

**சாத்தானுடைய வஞ்சகவல்லமைபற்றியும், அவன் செயல்படுகிற விதம்பற்றியும் மத் 24:23-27; 2கொரி 11:13,14; 2தெச 2:9-12 சொல்லுவது என்ன?**

காலத்தின் இறுதிக்கட்டத்தில், சாத்தான் தனது இறுதி வஞ்சகத்தைச் செயல்படுத்துகிறான்: 'அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளுடைய வல்லமைக்கு அடையாளமாக இயற்கைக்கு அப்பாற்பட்ட தன்மையுடைய பயங்கர காட்சிகள் சீக்கிரமே வானத்தில் உண்டாகும். அந்தப் பிசாசுகளின் ஆவிகள் பூமியின் ராஜாக்களிடத்திற்கும், உலகம் முழுவதிலுமுள்ள மக்களிடத்திற்கும் சென்று, வஞ்சகத்தால் அவர்களைக் கட்டி, பரலோக ராஜ்யத்திற்கு எதிரான சாத்தானுடைய கடைசி யுத்தத்தில் இணையும்படி அவர்களை வற்புறுத்தும். இந்த ஏதுகரங்கள் மூலம், ஆட்சியாளர்களும் சரி, மக்களும் சரி, ஒரே மாதிரியாக வஞ்சிக்கப்படுவார்கள். குணமாக்கும் பெரிய அற்புதங்களைச் செய்கிறவர்கள் வேதவாக்கியங்களுக்கு முரணாக பரலோகிலிருந்து தங்களுக்குப் புதிய வெளிப்பாடுகளை கிடைத்திருப்பதாகச் சொல்லிக்கொள்வார்கள்.

'இந்த ஏமாற்று நாடகத்தின் உச்சக்கட்ட காட்சியாக, சாத்தானே கிறிஸ்துவைப் போல வேடமணிந்து வருவான். திருச்சபை தனது நம்பிக்கையின் நிறைவேறுதலாக இரட்சகரின் வருகையை எதிர்பார்த்திருப்பதாக வெகுகாலம் சொல்லிவந்திருக்கிறது. இப்போது கிறிஸ்து வந்துவிட்டார் என்று பெரிய வஞ்சகன் தோன்றச் செய்வான். உலகின் வெவ்வேறு பகுதிகளில் சாத்தான் மனிதர்களின் மத்தியில் சுடர்விடும் பிரகாசமிக்க மகத்துவ தோற்றத்தில் தன்னை வெளிப்படுத்துவான்; அது வெளிப்படுத்தலில் யோவான் தேவகுமாரனைப்பற்றிச் சொல்லியுள்ள விளக்கத்திற்கு ஒத்ததாக இருக்கும். வெளி 1:13-15'.

---

**கிறிஸ்துவின் வருகை, மரித்தோரின் நிலை குறித்த சத்தியத்தைப் புரிந்துகொள்வது, நாம் வஞ்சிக்கப்படாமல் இருப்பதற்கு ஏன் மிகவும் முக்கியமானது?**

# மேலும் படிக்க:

பரலோக நிஜம் என்கிற தனது சமீபத்திய புத்தகத்தில், லீ ஸ்ட்ரோபெல் என்பவர், மரித்தவர்கள், ஒரு வகையான சுயநினைவோடு மரணத்தை அனுபவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்; அதற்கு ஓர் 'ஆதாரமாக' அவர், 'கிட்டத்தட்ட மரித்த அனுபவத்தை' பயன்படுத்தியிருக்கிறார். ஓர் உதாரணம்: 'இருதய அறுவைசிகிச்சையின்போது கிட்டத்தட்ட மரித்த அனுபவத்தைச் சந்தித்த ஒரு சிறுமி, மறுமை உலகில் தன் சகோதரனைச் சந்தித்தாளாம். அவளுக்கு சகோதரன் கிடையாது என்பதால் ஆச்சரியமடைந்தாள். தான் குணமானபிறகு, தன் அப்பாவிடம் அதைச் சொன்னாள்; அவர் முதன்முறையாக அவளிடம், அவளுக்கு ஒரு சகோதரன் இருந்ததாகவும், அவள் பிறப்பதற்கு முன்னரே மரித்துவிட்டதாகவும் சொன்னார்'. கிறிஸ்து திரும்ப வரும்போதுதான் கிறிஸ்தவர்கள் தங்கள் இறுதி பிரதிபலனைப் பெறுவார்கள் என்கிற தெளிவான வேதாகமம் போதிக்கிறது; ஆனால் ஸ்ட்ரோபலின் கருத்தோ நேர்மாறாக இருக்கிறது.

நமக்கு பின்வரும் எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது: 'தங்களுக்குப் பிரியமான உறவினர்கள் அல்லது நண்பர்கள்போலத் தோன்றி, மிகப்பயங்கரமான மதப்புரட்டுகளை அறிவிக்கிற பிசாசின் ஆவிகளை அநேகர் எதிர்கொள்ள நேரிடும். இவ்வாறு வருபவர்கள், நமது கனிவான அனுதாபங்களை வென்று, தங்கள் பாசாங்குகளைத் தக்கவைக்க அற்புதங்களைச் செய்வார்கள். மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள் என்றும் அவ்வாறு தோன்றுபவர்கள் பிசாசுகளின் ஆவிகள் என்றும் சொல்கிற வேதாகமச் சத்தியத்தால் அவர்களை எதிர்கொள்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

... எவரது விசுவாசம் தேவனுடைய வார்த்தையின்மீது உறுதியாக நிலைநிறுத்தப்படவில்லையோ அவர்கள் அனைவரும் வஞ்சிக்கப்பட்டு, மேற்கொள்ளப்படுவார்கள். சாத்தான் மனுபுத்திரரைக் கட்டுப்படுத்துவதற்கு 'அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும்' செயலாற்றுகிறான்; அவனது வஞ்சகங்கள் தொடர்ந்து அதிகரிக்கும்; ஆனால் மனிதர்கள் தாங்களாகவே அவனது சோதனைகளுக்கு இணங்கும்போதுமட்டுமே, அவன் தனது நோக்கத்தை நிறைவேற்றமுடியும். சத்தியத்தைக் குறித்த அறிவைப் பெற ஊக்கமாக முயன்று, கீழ்ப்படிதலால் தங்களது ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்தப் போராடி, இவ்விதமாக இந்தப் போரட்டத்திற்காக தங் களால் முடிந்தமட்டும் ஆயத்தமாகிறவர்கள், சத்தியத்தின் தேவனில் நிச்சயமான பாதுகாப்பைக் கண்டுகொள்வார்கள். "என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத் துக்கொண்டபடியினால், நானும் உன்னைக் காப்பேன்" (வசனம் 10) என்பது இரட்சகரின் வாக்குத்தம். தம்மை நம்புகிற ஒரு ஆத்துமாகூட சாத்தானால் மேற்கொள்ளப்படாதபடி, அவர் உடனடியாக பரலோகத்தின் ஒரு தூதனை அனுப்பிவைப்பார்'.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *மனதில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு நயவஞ்சகமான என்ன ஆவிமார்க்க செல்வாக்குகளை சாத்தான் பயன்படுத்தக் கூடும்? இதில் கத்தின் பங்கு என்ன?*
2. *தனக்கு பிரியமான ஒருவரை இழந்த, அந்த நபர் தற்போது பரலோகத்தில் இருப்பதாக நம்பிக்கொண்டிருக்கிற நண்பர் உங்களுக்கு இருந்தால், அவரிடம் உங்கள் விசுவாசத்தை எவ்வாறு பகிர்ந்துகொள்வீர்கள்? எதைச் சொல்வது பொருத்தமாக இருக்கும், எது பொருத்தமாக இருக்காது?*

# நைஜீரியாவில் சந்திக்கப்படாத நகரம்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

பல சாலைகள் சந்திக்கிற முக்கியமான ஓரிடத்தில் உள்ளது நைஜீரியாவின் உமுவாகா நகரம். அங்கு ஒரு பெரிய சந்தை உள்ளது; அதனால் அக்கம்பக்கத்திலிருந்து ஏராளமான மக்கள் வருவார்கள். ஆனால் அங்கு செவந்த் – டே அட்வென்டிஸ்ட் சபை இல்லை.

அட்வென்டிஸ்ட் சபையின் ஆபா வட கான்ஃபரன்ஸ் அந்நகரத்திற்கு அருகில்தான் அமைந்துள்ளது.ஆனால் உமுவாகா நகரத்தில் சபை இல்லை. ஏன்?

உமுவாகாவில் முதன்முதலாக 80 வருடங்களுக்கு முன்னரே சபை ஆரம்பிக்கப்பட்டது; அப்போது அங்கு அந்தச் சபை மட்டுமே இருந்தது. வருடங்கள் கடந்தன; பட்டணத்தினர் வெளியாட்களுக்கு தங்கள் நிலங்களை விற்கவே, அவர்கள் வேறு சபைகளை அங்கு கட்டினார்கள். பழைய சபை புதிதாக வந்தவர்களை வரவேற்றது; ஆனால், வித்தியாசமான ஒரு நாளில் ஆராதனை செய்த செவந்த்–டே அட்வென்டிஸ்டுகளை மட்டும் வரவேற்கவில்லை.

பக்கத்து நகரங்களில் இருந்த அட்வென்டிஸ்ட் சபைகளால்கூட உமுவாகாவை அணுக முடியவில்லை. அங்கே சுவிசேஷக் கூட்டங்களை நடத்த முயன்றபோது, யாரும் இடம் கொடுக்கவில்லை. அருகிலிருந்த முபா எனும் இடத்தைச் சேர்ந்த அட்வென்டிஸ்ட் சபையினர், உமுவாகா நகரத்திற்கு வெளியே இரண்டு வார சுவிசேஷக் கூட்டங்களை நடத்தி, கிளை ஓய்வுநாள் பள்ளி ஒன்றை ஆரம்பித்தார்கள். ஆனால் மூன்று மாதங்களில் அதுவும் மூடப்பட்டது. பிறகு, முபாவின் வாலிபர்கள் வேதவகுப்புகளை நடத்தினார்கள்; உமுவாகாவைச் சேர்ந்த குடும்பத்தினர் ஓய்வுநாட்களில் அதில் கலந்துகொண்டார்கள். ஆனால் அக்கம்பக்கத்தினர் அவர்கள்மேல் கற்களை எறியவே, கூட்டங்களில் கலந்துகொள்வதை நிறுத்தினார்கள்.

2021இல், ஆபா வட கான்ஃபரன்ஸ், உமுவாகாவில் சுவிசேஷக் கூட்டங்களை நடத்துவதற்கு புதிதாகத் திட்டம்தீட்டியது; ஆனால் அங்கு இடம் கிடைக்கவில்லை. ஒருவர் கொட்டகையை வாடகைக்குக் கொடுக்க முன்வந்தார்; பிறகு மனதை மாற்றிக்கொண்டார். 2022ம் ஆண்டிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தோல்வியில் முடிந்தன. பிறகு கிறிஸ்டியன் என்கிற சபை உறுப்பினர் ஒருவர், ஏதாவது இடம் கிடைக்குமா என்று புதிதாக முயற்சியில் இறங்கினார். தேடிக்கொண்டிருந்த போது, சிலாகா என்கிற பள்ளி உரிமையாளர் ஒருவரைச் சந்தித்தார். “அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள், என்ன தேடுகிறீர்கள்?” என்று கேட்டார். “உங்களைத் தான் தேடிக்கொண்டிருக்கிறேன்” என்று கிறிஸ்டியன் சொன்னார். இருவரும் பேசினார்கள்; கூட்டங்கள் நடத்த இடம் கொடுப்பதற்கு பள்ளி உரிமையாளர் முன்வந்தார். கிறிஸ்டியன் அவருக்கு நன்றி சொன்னார்.

ஒரு மாதம் முழுவதும் உமுவாகாவில் தேவ வார்த்தையைப் பிரசங்கித்தார்கள். அங்கிருந்த வியாதியஸ்தர்களுக்கு மருத்துவ ஊழியர்கள் சிகிச்சையளித்தார்கள். முடிவில், 29 விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் ஞானஸ்நானம் பெற்றன. பிறகு ஒருவர் ஒரு நிலத்தை நன்கொடையாகக் கொடுத்தார்; உமுவாகாவில் ஒரு அட்வென்டிஸ்ட் சபை உருவானது.

“இன்று தேவமகிமைக்காக சபை வளர்ந்து வருகிறது” என்று சொன்னார் ஆபா வடக்கு கான்ஃபரன்ஸின் சுவிசேஷ இயக்குனரான உசென்னா ஓன்யென்டி.